# டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி)

கோயம்புத்தூர் - 641 048.

தமிழ்த்துறை

# செய்திமடல்

## 2015 - 2016



### பதிப்புக்குழுவினர்

புரவலர்

**மருத்துவர் நல்ல பழனிசாமி**

தலைவர்

உலகத் தமிழ்ப்பண்பாட்டு மையம்

கோவை மருத்துவமைய ஆராய்ச்சி

மற்றும் கல்வி அறக்கட்டளை

மதியுரைஞர்

**மருத்துவர் தவமணிதேவி பழனிசாமி**

செயலர்

டாக்டர் என்.ஜி.பி. கல்வி நிறுவனங்கள்

தலைமைப் பதிப்பாசிரியர்

**முனைவர் பெ.இரா. முத்துசாமி**

முதல்வர்

பொறுப்பாசிரியர்

**முனைவர் நீ. குப்புச்சாமி**

தமிழ்த்துறைத் தலைவர்

பதிப்பாசிரியர்

**முனைவர் நா. பரமசிவம்**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

**பதிப்பாசிரியர் பக்கம் :**

உலகம் இன்றளவும் நிலை பெற்றிருப்பதற்குக் காரணம் அதன் தொடர்ச்சியான இயக்கமாகும். உலகில் தோன்றிய அனைத்து உயிர்களும் இவ்வியக்கத்திற்கு உட்பட்டே அதனதன் செயல்களைச் செய்கின்றன. உருவமில்லாக் காற்றும் கூட பிற பொருள்களின் மீது மோதி அப்பொருள்களின் அசைவின் மூலம் தன் இருப்பையும், மண்ணில் நிலைபெற்று நகர இயலாத மரங்கள் கூட பூத்தல், காய்த்தல் மூலம் தன்னுடைய இயக்கத்தையும் வெளிப்படுத்தி வருகின்றன.

இவ்வியக்கங்கள் அனைத்தும் விழிவழியும் செவிவழியும் புலனாகுமாறு வெளிப்பட்டுத் தத்தம் காரியங்களைச் செய்ய இறுதியில் விழியும் செவியும் இணைந்து ஒலி வழி உலக இயக்கத்திற்கு ஓர் எழுச்சியை உண்டாக்கின. அதுவரை சூன்யமாய் இருந்த பூமி ஒலியையும் அதன்வழி பொருள்நிறைந்த ஓசையையும் கேட்டடைந்த பின்னர், உலகு தன் இயக்கத்தைக் காலப்பெருவழியில் பயணம் செய்தது. அப்பயணம், பதிவுகளை முன்னிறுத்த எழுந்த பயணமாக மாறியது.

ஆதிகால மனிதன் பிற உயிர்களைப்போன்று சைகைகளையும், சப்தங்களையும் எழுப்பித் தகவல் பரிமாற, அவை போதாதென்று கருதிய ஆதித்தமிழன் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்னும் வெவ்வேறு உறுப்புகளால் பல்வித சொல்லையும், சொல்லின் வழி பொருளையும் உணர்த்தித் தமிழை உயர்தனிச் செம்மொழியாக அரியணையில் அமரச் செய்தான். ஆக இதழில் தோன்றிய மொழி இடையறாத இயக்கத்தால் இன்று இணைய மொழியாக உருவெடுத்து உயர்ந்து நிற்கின்றது.

தமிழ் என்னும் மொழி காலந் தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு நடைபெறுவதற்குக் காரணம் யாதெனில், அது இடையறாது தொய்வின்றி நிகழும் பயணமும், அப்பயணத்தின் வழி கிடைத்த பதிவுகளுமே ஆகும். ஆக ஒரு மொழியானது தன் நீண்ட வரலாற்றைக் கூறுவதற்கு அடித்தளமாக விளங்குவது பதிவுகளே. அவ்வகையில் டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையானது தனது முந்தைய ஆண்டின் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் விதமாக செய்தி மடலைப் படைத்துள்ளது.

**விருதுகள் :**

11.07.2015 கோயம்புத்தூர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியும் திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகமும் இணைந்து நடத்திய கதைத் தமிழ் அனைத்துலக 13 வது ஆய்வு மாநாட்டில் "**கதை ஆய்வுச்சுடர்**" என்னும் விருதினைப் பேராசிரியர்கள் முனைவர் நீ. பகவதியம்மாள், செல்வி. இரா. வீரமணி, முனைவர் கி. முருகேசன் ஆகியோர் பெற்றனர்.

10.01.2016 அன்று திருவாவடுதுறை ஆதீனம் சித்தாந்த ரத்தினம் என்னும் விருதினை உதவிப்பேராசிரியர் திரு. நா. கிருஷ்ணராஜ் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தது.

**கருத்தரங்குகள் :**

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **கதைத்தமிழ் ஆய்வு** என்னும் பொருண்மையில் கடந்த 11.07.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் நீ. பகவதியம்மாள் அவர்கள் **பொன்னீலனின் மறுபக்கம் நாவல் - வரலாறும் பண்பாடும் பின்னணியும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் **கொங்கு நாட்டுப்புற தெய்வ வழிபாட்டு முறைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 18, 19.12.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் நீ.பகவதியம்மாள் அவர்கள் **குளிர்ந்த மாரியம்மன் கோவில் - வரலாறும் பின்னணியும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கோவை, கே.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியில் **இலக்கியத்தில் மனிதநேயம்** என்னும் பொருண்மையில் கடந்த 12.02.2016 அன்று நடைபெற்ற தேசியக்கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் நீ. பகவதியம்மாள் அவர்கள் **சங்க இலக்கியங்களில் மனிதநேயம்** என்னும் தலைப்பில் கட்டுரை படைத்தார்.

மதுரை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07, 08.08.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் சு.தங்கமணிகண்டன் அவர்கள் **புலமிய நெறியின் நீட்சியும் புதிய நடையும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் **கொங்கு நாட்டுப்புற தெய்வ வழிபாட்டு முறைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 18, 19.12.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் த. சிவக்குமார் அவர்கள் **முத்தணம்பாளைய அங்காளம்மன் கோவிலில் நடைபெறும் சிவராத்திரித் திருவிழா** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் மானுடக் கலைக்கூறுகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07.12.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் த.சிவக்குமார் அவர்கள் **குறுந்தொகையில் தலைவியின் ஆற்றாமை** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் மானுடக் கலைக்கூறுகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07.12.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் நா.பரமசிவம் அவர்கள் **ஐங்குறுநூற்றுத் தலைவியின் உறுப்பு நலன்களும் பின்புலமும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கியுள்ளார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **கதைத்தமிழ் ஆய்வு** என்னும் பொருண்மையில் கடந்த 11.07.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் இரா.வீரமணி அவர்கள் **பரமார்த்த குரு கதையில் தொன்மம்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

மதுரை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07, 08.09.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் இரா. வீரமணி அவர்கள் **பொன்னீலனின் மறுபக்கம் நாவலில் வாழ்வியல் கூறுகள்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கோவை, கற்பகம் பல்கலைக்கழகத்தில் **தமிழில் பிறதுறைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 21.11.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப் பேராசிரியர் இரா. வீரமணி அவர்கள் **வரலாற்றுச் சிந்தனையில் பொன்னீலனின் மறுபக்கம்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் மானுடக் கலைக்கூறுகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07.12.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் இரா. வீரமணி அவர்கள் **மகாகவி பாரதியின் பார்வையில் பெண்ணின் பெருமை** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **கதைத்தமிழ் ஆய்வு** என்னும் பொருண்மையில் கடந்த 11.07.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் கி. முருகேசன் அவர்கள் **காட்சி அமைப்பில் அகநானூற்றுப் பாணனும் பாணர் கூட்டமும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

மதுரை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07, 08.08.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் கி. முருகேசன் அவர்கள் **முன்னைத்தமிழரும் முன்னோர் வழிபாடும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் மானுடக் கலைக்கூறுகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07.12.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் கி. முருகேசன் அவர்கள் **சங்கமகளிர் எதிர்கொண்ட இன்னல்கள்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை படைத்தளித்தார்.

கோவை கற்பகம் பல்கலைக்கழகத்தில் **தமிழில் பிற துறைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 21.11.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் நா. கிருஷ்ணராஜ் அவர்கள் **உயிருக்குள் தாகத்தில் சமூகச் சிந்தனைகள்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கியுள்ளார்.

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் **தமிழ் இலக்கியத்தில் மானுடக் கலைக்கூறுகள்** என்னும் பொருண்மையில் கடந்த 07.12.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் நா. கிருஷ்ணராஜ் அவர்கள் **பூக்குழி புதினத்தில் விளிம்புநிலைப் பெண்ணின் வாழ்வியல்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் **கொங்கு நாட்டுப்புற தெய்வ வழிபாட்டு முறைகள்** என்னும் பொருண்மையில் கடந்த 18, 19.12.2015 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் நா.கிருஷ்ணராஜ் அவர்கள் **கண்ணாடிப்புத்தூர் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

விவேகானந்தா கலை அறிவியல் கல்லூரியில் **பன்முக நோக்கில் தமிழியல்** என்னும் பொருண்மையில் கடந்த 21.12.2015 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் நா. கிருஷ்ணராஜ் அவர்கள் **நீதிநெறி விளக்கத்தில் காணலாகும் வாழ்வியல் நீதிகளும்**

நெறிகளும் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

கோவை கே.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியில் **இலக்கியத்தில் மனிதநேயம்** என்னும் பொருண்மையில் கடந்த 12.02.2016 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் நா. கிருஷ்ணராஜ் அவர்கள் **ஆற்றுப் படைகளில் மனித நேயம்** என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

கோவை இராமகிருஷ்ணா வித்யாலயா கலை அறிவியல் கல்லூரியில் 08, 09.03.2016 இல் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் **இன்றைய வாழ்வியல் நோக்கில் அத்வைதம் தொன்மம் யோகம்** என்னும் தலைப்பில் உதவிப்பேராசிரியர் வி. செந்தமிழ்செல்வி அவர்கள் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

### பன்னாட்டு ஆய்வு இதழ் (INTERNATIONAL JOURNAL)

2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளிவந்த **செம்புலம்** என்னும் பன்னாட்டுத் தமிழ்க்காலாண்டு ஆய்விதழில் இணைப்பேராசிரியர் முனைவர் நா. பரமசிவம் அவர்கள் **புறநானூற்றுப் பெண்களின் வாழ்வியல்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

### பன்னாட்டு ஆய்வு மின்னிதழ் (INTERNATIONAL E-JOURNAL)

2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளிவந்த **இனம்தமிழ்** என்னும் பன்னாட்டுத் தமிழ்க்காலாண்டு ஆய்வு மின்னிதழில் இணைப்பேராசிரியர் முனைவர் நா. பரமசிவம் அவர்கள் **புறநானூற்றுப் போரியலில் இயற்கைச் சிதைப்பு** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

### பயிலரங்கு

கோவை,பாரதியார் பல்கலைக்கழகத்தில் 29.03.2016 இல் **ஆளுமை வளர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்** என்ற தலைப்பில் நடைபெற்ற பயிலரங்கில் இணைப்பேராசிரியர்கள் முனைவர் நீ. குப்புச்சாமி, முனைவர் சு. தங்கமணிகண்டன், உதவிப்பேராசிரியர்கள் முனைவர். த. சிவக்குமார், முனைவர் கி. முருகேசன், திரு. நா. கிருஷ்ணராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவை இராமகிருஷ்ணா வித்யாலயா கலை அறிவியல் **கல்லூரியில்** 08, 09.03.2016 இல் **இன்றைய வாழ்வியல் நோக்கில் அத்வைதம் தொன்மம் யோகம்** என்னும் தலைப்பில் நடைபெற்ற பயிலரங்கில் உதவிப்பேராசிரியர் வி. செந்தமிழ்செல்வி அவர்கள் கலந்து கொண்டார்.

## உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையம்

### பாராட்டு விழா

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தொல்காப்பியர் விருது பெற்ற தினமலர் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி** அவர்களுக்கு உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் சார்பில் 19.06.2015 வெள்ளிக் கிழமையன்று பாராட்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி அவர்களும், நம் கல்லூரியின் செயலர் மருத்துவர் தவமணி தேவி பழனிசாமி அவர்களும், முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் மற்றும் முனைவர் ப.க. பொன்னுசாமி ஆகியோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்புச் செய்தனர்.

### நாடளாவிய கருத்தரங்கம்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் மூலமாக பாளையங்கோட்டை தூய சவேரியர் கல்லூரியில் **கரிசல் இலக்கியம்** குறித்த நாடளாவிய கருத்தரங்கம் 28.11.2015 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. 13 கட்டுரையாளர்கள் கரிசல் படைப்பாளர்களின் படைப்புகள் குறித்த தங்களுடைய கட்டுரைகளை வழங்கினர். அக்கட்டுரையாளர்களுக்கு உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி அவர்கள் நினைவுப்பரிசும், ஊக்கத்தொகையும் வழங்கிச் சிறப்புச் செய்தார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக கரிசல் இலக்கியப் படைப்பாளர் திரு. தோப்பில் முகமது மீரான் அவர்கள் கலந்து கொண்டு கருத்தரங்க நூலை வெளியிட்டதோடு மண்ணின் மகத்துவத்தையும் அம்மண்ணில் முகிழ்க்கும் படைப்பில் அம்மக்களின் வாழ்வியலையும் எடுத்துரைத்தார். இவ்விழாவிற்கு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களும், தூய சவேரியர் கல்லூரியின் முதல்வர் அவர்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.














## விருதுகள் வழங்கும் விழா

உலகத்தமிழ் பண்பாட்டு மையத்தின் விருதுகள் வழங்கும் விழா கடந்த 19.12.2015 அன்று நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் கு. இராமசாமி அவர்கள், பேராசிரியர் ப.க. பொன்னுசாமி அவர்கள் எழுதிய அண்டம்... கோட்பாடுகள்... அசோக் சென்... என்னும் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். பின்னர் விழாவில் பேராசிரியர் கா. செல்லப்பன் அவர்களுக்கு தமிழறிஞர் விருதும், முனைவர் திருப்பூர் கிருஷ்ணன் அவர்களுக்கு இதழியல் அறிஞர் விருதும், திரு. இரா. பூபாலன் அவர்களுக்கு இளம்படைப்பாளி / கவிஞருக்கான விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

## தமிழ்த்துறையின் செயல்பாடுகள்

### இளங்கோவடிகள் தமிழ்மன்றத் துவக்கவிழா

தமிழ்த்துறையின் இளங்கோவடிகள் தமிழ்மன்றத் துவக்கவிழா 07.08.2015 அன்று நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக கவிமாமணி பேராசிரியர் முனைவர் அப்துல்காதர் அவர்கள் கலந்துகொண்டு **வெளிச்சம் வெளியே இல்லை** என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். மாணவச் செல்வங்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் ஆளுமைகளையும் அம்மாணவர்களே வியக்கும் வகையில் பல்வேறு சான்றுகளுடன் எடுத்துரைத்தார்.




### பாரதி விழா

"பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட வேண்டும்" என்று முழங்கிய பாரதியின் பிறந்தநாள் விழா 11.12.2015 அன்று நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராகத் தேடலும் தெளிதலும் இயக்குநர் மற்றும் சுய முன்னேற்றப் பயிற்சியாளர் மகேஸ்வரி சத்குரு அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். பாரதி என்னும் ஆளுமையின் பல்வேறு சிறப்புக்களை உணர்த்திய சிறப்பு விருந்தினர் அவர்கள் பாரதியின் புதல்வர்களாய், பாரதிக்கு இன்றைய தலைமுறையினர் அளிக்க வேண்டிய மதிப்பையும், அவரின் வழி நின்று ஆற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் மாணவர்கள் மனதில் பதியச் செய்தார்.




### தமிழோசை இதழ் வெளியீட்டு விழா

மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் வகையில் டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் ஆண்டுதோறும் தமிழோசை இதழ் சிறப்பாக வெளியிடப்பெற்று வருகின்றது. அவ்வகையில் 2015 ஆம் ஆண்டிற்கான தமிழோசை இதழ் வெளியீட்டு விழா 19.02.2016 அன்று சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக பேச்சாளர் மற்றும் சமூக ஆர்வலர் பாரதி பாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு தமிழோசை இதழை வெளியிட்டு **இமயம் தொடு** என்ற தலைப்பில் இனியதொரு சொற்பொழிவினை வழங்கிச் சிறப்பித்தார், இவ்விழாவில் தமிழ் மொழியின் பல்வேறு சிறப்புக்களை எடுத்துரைத்த அவர், மொழியின் இன்றைய நிலையை எடுத்துரைத்ததோடு மட்டுமல்லாமல் இளைய தலைமுறைப் படைப்பாளர்கள்தான் தமிழ் மொழியை செழுமைப்படுத்த வேண்டும் என்றும், இளம் தலைமுறையினர் தோல்விகளைத் தூசியைப்போல் துடைத்துவிட்டு வெற்றியை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னரும் தோல்விகள், கண்ணீர், அவமானம், அழுகை நிறைந்திருக்கும். அவற்றைக் கடந்து வெற்றிக்கனியைப் பறிக்க வேண்டும் என்று கூறினார்.

இமயத்தைத் தொட்ட அருனிமா சின்ஹா போல ஒவ்வொருவரும் வாழ்வில் இமயம் போன்ற உயரத்தை அடைய மனதில் உறுதி கொள்ள வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார்.



## தமிழ்த்துறையின் சார்பில் நடைபெற்ற போட்டிகளில் மாணவர்கள் பெற்ற பரிசுகள்

டாக்டர் அப்துல்கலாம் பிறந்தநாளான அக்டோபர் 15 ஆம் நாளான இளைஞர்களின் எழுச்சிநாளில் மாணவர்களை ஊக்குவிக்கவும், அப்துல்கலாம் அவர்களை நினைவு கூறும் வகையிலும் தமிழ்த்துறையானது மாணவர்களுக்கு மண் தந்த மனிதம் என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியினை நடத்தியது. அப்போட்டியில் இளநிலை இரண்டாமாண்டு கணினித் தொழில்நுட்பவியல் மாணவர் பா.செந்தூரன் முதல்பரிசையும், இளநிலை இரண்டாமாண்டு உணவு மற்றும் ஊட்டச்சத்து துறையைச் சார்ந்த மாணவி சி. சங்கவி இரண்டாம் பரிசினையும், இளநிலை முதலாமாண்டு கணினித் தொழில்நுட்பவியல் மாணவர் தி.சத்யராஜ் மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.





தமிழ்த்துறை வெளியிட்ட தமிழோசை இதழில் சிறந்த படைப்புகளை அளித்த மாணவர்களுக்கு முதல் மூன்று பரிசுகள் வழங்கப்பட்டன. இளநிலை மூன்றாமாண்டு கணினிப்பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர் பா.கிரஷோத் முதல் பரிசையும், இளநிலை மூன்றாமாண்டு மேலாண்மைத் துறையைச் சார்ந்த மாணவி தரணி கதிரேசன் இரண்டாம் பரிசையும், மூன்றாம் பரிசினை இளநிலை முதலாண்டு உயிர்தொழில் நுட்பவியல் துறையைச் சார்ந்த மாணவி செ. பவதாரணி ஆகியோரும் பெற்றனர்.





பாரதி பிறந்தநாளையொட்டி மானுடம் வெல்கவென்று கூத்திடுவோமடா என்னும் தலைப்பில் பேச்சுப்போட்டியினை தமிழ்த்துறையானது நடத்தியது. அப்போட்டியில் இளநிலை மூன்றாமாண்டு நிர்வாக மேலாண்மையியல் மாணவர் இரா. வினோதரன் முதல் பரிசையும், இளநிலை இரண்டாமாண்டு கணினித் தொழில்நுட்பவியல் மாணவர் பா. செந்தூரன் இரண்டாம் பரிசையும், முதுநிலை முதலாண்டு கணிதவியல் மாணவர் த. மும்மூர்த்தி மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

## தமிழ்த்துறை நடத்திய நிகழ்ச்சிகளின் படத்தொகுப்புகள்




























## டாக்டர் என்.ஜி.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி)

டாக்டர் என்.ஜி.பி. கல்வி நகர் - காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர் - 641 048.

தொலைபேசி : 0422 - 2369100, 2369209 தொலை நகல் : 0422 - 2369209

மின்னஞ்சல் : drngparts@kmch.ac.in வலைதளம் : www.drngpasc.ac.in


